## திட்ட உதவிப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

ஒருங்கிணைந்த கிராமிய-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்தன்மைத் திட்டம் (IRDCRP) என்பது இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் உலக வங்கி (WB) ஆகியவற்றின் கூட்டு நிதியுதவியுடன் விவசாய, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒரு திட்டமாகும். திட்டத்தின் மொத்தச் செலவு 103 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது பண்ணை முதல் நுகர்வோர் வரையிலான மதிப்புச் சங்கிலியில் (Value Chain) அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக விவசாயம், கால்நடை, மீன்பிடி மற்றும் பெருந்தோட்டம் ஆகிய துறைகளில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த 5 ஆண்டு கால திட்டத்தின் முக்கிய நோக்கம், திட்டப் பகுதிகளில் உள்ள விவசாய-உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித்திறன், போட்டித்திறன் மற்றும் காலநிலை மீள்தன்மையை மேம்படுத்துவதாகும்.
திட்ட **முகாமைத்துவப்** பிரிவின் (PMU) பின்வரும் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு **பதவிக்குமான** சம்பளம், 2026 பெப்ரவரி 02 ஆம் திகதியிட்ட 01/2026 இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் அடிப்படையில் அமையும்.

| எண் | பதவி | வெற்றிடங்கள் | சம்பளவகுப்பு & சம்பள அளவுத்திட்டம் |
|---|---|---|---|
| 1 | முகாமைத்துவ உதவியாளர் | 4 | MA -2 (G – III): ரூபா 46,010.00 + (46,010 x 50%) = ரூபா 69,015.00 |
| 2 | ஓட்டுநர்கள் (Drivers) | 2 | PL - 3: ரூபா 41,209.00 + (41,209 x 50%) = ரூபா 61,813.50 |
| 3 | அலுவலக உதவியாளர் (Office Aide) | 3 | PL - 1 (G- III): ரூபா 38,863.00 + (38,863 x 50%) = ரூபா 58,294.50 |

**பதவிகளுக்கான அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**பதவி - முகாமைத்துவ உதவியாளர் – MA 2 (III)**

1. **கல்வித் தகைமை:**
   i. க.பொ.த (சா/தர) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு (4) திறமைச் சித்திகளுடன் (Credit passes) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்:

- சிங்களம் / தமிழ்
- ஆங்கில மொழி
- கணிதம்

   ii. க.பொ.த (உ/தர) பரீட்சையில் (பொதுப் பாடப்பரப்பு தவிர்ந்த) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. **அனுபவம் மற்றும் ஏனைய திறன்கள்:**
   i. கணினி மென்பொருள் பயன்பாடுகளைப் பயன்படுத்தும் பணிச்சூழலில் குறைந்தது ஒரு வருட அனுபவம் மற்றும் கணினி அறிவு பெற்றிருத்தல்.
   ii. வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டத்தில் இதேபோன்ற பதவியில் 3 வருட பணி அனுபவம் இருப்பது கூடுதல் தகைமையாகக் கருதப்படும்.
   iii. சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யும் திறன்.

3. **வயது:** 18 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

**பதவி - ஓட்டுநர் (Driver) – (PL 3)**

1. **கல்வித் தகைமை:**
   i. க.பொ.த (சா/தர) பரீட்சையில் 2 திறமைச் சித்திகள் உட்பட குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. **தொழில்நுட்பத் திறன்:**
   மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் உரிமம் பெற்ற பிறகு குறைந்தது மூன்று (03) வருட அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

3. **வயது:** 18 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

**எனைய திறமைகள்**:

- மோட்டார் வாகனம் பழுது **பார்க்கும் ,அடிப்படை அறிவு**
- ஆங்கிலத்தில் உரையாடும் திறமை.

**பதவி - அலுவலக உதவியாளர் (Office Aid) - [ஆரம்ப நிலை - அரைத் திறன் (PL 1)]**

1. **கல்வித் தகைமை:**
   க.பொ.த (சா/தர) பரீட்சையில் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. **வயது:** 18 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
   - **எனையதிறமைகள்:**
     திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் (Project Management Office) பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

---

**பொது நிபந்தனைகள்:**

- இலங்கையில் நன்கொடையாளர் நிதியுதவி அளிக்கும் திட்டங்களில் (Donor-funded projects) இதேபோன்ற அல்லது உயர் பதவியில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- பணியாளர்கள் தேவைக்கேற்ப திட்டப் பகுதிகளுக்குப் பயணம் செய்ய வேண்டும்.
- ஆங்கிலப் புலமை, கணினி அறிவு மற்றும் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்த பரிச்சயம் அவசியம்.
- சம்பந்தப்பட்ட துறைகளில் தொழில்சார் தகைமைகள் ஒரு கூடுதல் தகைமையாகக் கருதப்படும்.
- தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட (Short-listed) விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். மேற்கூறிய ஆட்சேர்ப்பு தொடர்பான விவசாய, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானது.எந்த வடிவத்திலும் செல்வாக்கு செலுத்துதல் (Canvassing) தகுதியின்மையாகக் கருதப்படும் மற்றும் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும்வழிமுறை**:

:

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தை ஒரு முகப்புக் கடிதம் (Covering letter), சுயவிபரக்கோவை (CV), இரு உறவினர் அல்லாதவர்களின் விபரங்கள் மற்றும் அனைத்து சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட பிரதிகளுடன் **20.03.2026** அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.மேலும்,காலக்கெடுவுக்கு முன்னதாக **pmuirdcrp@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் விண்ணப்பத்தை அனுப்பவும்.

விண்ணப்பப் படிவத்தின் மேல் இடதுபுற மூலையிலும், விண்ணப்பம் அடங்கிய உறையின் மீதும் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தற்போது அரசு/அரை (semi ) அரசு சார்பு சேவைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

**திட்ட பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவப் பிரிவு** (PMU),
**ஒருங்கிணைந்த கிராமிய-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்தன்மைத் திட்டம்**,
**இலக்கம்**: 123/2, **பன்னிபிட்டிய வீதி**,
**பத்தரமுல்ல**.

***செயலாளர்,விவசாய, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு***